ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிநாத சுவாமிகள் கலைக் கல்லூரி
திருப்பனந்தாள் – 612504
S.K.S.S ARTS COLLEGE, THIRUPPANANDAL - 612504





# வினாவங்கி

தாளின் தலைப்பு

# அற இலக்கியம்

**CORE COURSE - VII I M.A**

**பாடக்குறியீடு : P16TA23**

**பருவம் II**

தயாரித்தவர்




**முனைவர் ம.புவனேஸ்வரி,** எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.,
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை

## அற இலக்கியம்

அலகு 1: திருக்குறள் - அறத்துப்பால் (1-25 அதிகாரங்கள்)

அலகு 2: பழமொழி நானூறு - 26 முதல் 50 வரை 25 பாடல்கள்

அலகு 3: நாலடியார் - நட்புப் பற்றிய பாடல்கள், சுற்றந்தழால் - கூடாநட்பு - நட்பாராய்தல் - நட்பின் பிழை பொறுத்தல்(40 பாடல்கள்)

அலகு 4: திரிகடுகம் ( 1-20 பாடல்கள்)

நான்மணிக்கடிகை (1-20 பாடல்கள்)

அலகு 5: இனியவை நாற்பது (40 பாடல்கள்) முழுவதும்

**பாடநூல்கள்**

பாடத்திட்டத்தில் காணப்படும் பதினெண்கீழ்க்கணக்கு நூற்பகுதிகள்

(மர்ரே எஸ் ராஜம் பதிப்பு - மறுஅச்சு என்.சி.பி.எச். - அடிப்படையில்)

# அலகு - 1

## பகுதி - அ

## ❖ சரியான விடையைத் தேர்ந்தெடு

1.'அறவாழி அந்தணன்' என்று சுட்டப்படுபவர்

அ) இல்வாழ்வான்

ஆ) அந்தணன்

இ) கடவுள்

ஈ) துறவி

2. ஐந்தவித்தான் ஆற்றலுக்குச் சான்றாகத் திருவள்ளுவரால் குறிப்பிடப்பட்டவர்

அ) சிவபெருமான்

ஆ) இந்திரன்

இ) திருமால்

ஈ) நான்முகன்

3. அறன் எனப்பட்டதே .............

அ) இல்வாழ்க்கை

ஆ) கல்வி

இ) கேள்வி

ஈ) துறவு

4. அன்பிற்குச் சான்றாக அமைவது

அ) இனியவை கூறல்

ஆ) விருந்தோம்பல்

இ) அளவளாவி மகிழ்தல்

ஈ) கண்ணீர்

5. பணிதல் யாருக்குச் சிறந்த செல்வமாகக் கருதப்படுகிறது.

அ) மாணவர்

ஆ) செல்வர்

இ) துறவி

ஈ) கல்வியாளர்

6. ஒருநாள் மட்டுமே இன்பம் அடைபவர்

அ) கற்றார்

ஆ) பொறுத்தார்

இ) ஒறுத்தார்

ஈ) சான்றோர்

7. மக்களால் பதடி என்று சுட்டப்படுபவன்

அ) புறங்கூறுபவன்

ஆ) பிறனில் விழைபவன்

இ) பயனில சொல்பவன்

ஈ) ஒழுக்கமற்றவன்

8. தீயினும் அஞ்சப்படுவது

அ) தீயவை

ஆ) பழி

இ) அறமற்றவை

ஈ) சான்றோர் பழித்தல்

9. யாருக்கு ஈவதே ஈகை எனப்படும்.

அ) இரப்பவர்

ஆ) வறியார்

இ) பண்பாளர்

ஈ) சான்றோர்

10. உலகில் பொன்றாது நிற்பது

அ) கல்வி

ஆ) ஈகை

இ) வாய்மை

ஈ) புகழ்

**விடைகள் 1.இ 2.ஆ 3.அ 4.ஈ 5.ஆ 6.இ 7.இ 8.அ 9.ஆ 10.ஈ**

## பகுதி - ஆ

## ❖ ஓரிரு சொற்களில் விடையளி

11. யாருக்கு மனக்கவலை மாற்றல் அரிது?
12. வானம் வழங்காவிட்டால் உலகில் எவை தங்காது?
13. இல்வாழ்வார் ஓம்ப வேண்டிய ஐவரைச் சுட்டுக.
14. மகன் தந்தைக்குச் செய்ய வேண்டிய உதவி யாது?
15. செம்பொருள் கண்டார் வாய்ச்சொல் எத்தகையது?
16. சான்றோர்க்கு அணியாவதனைச் சுட்டுக.
17. 'நினைக்கப்படும்' என்று திருவள்ளுவர் எதனைக் குறிப்பிட்டுள்ளார்?
18. தீயவை செய்தார் கெடுதல் எத்தகையது?
19. பெருந்தகையாளன் செல்வத்திற்கு உவமையாவதனைக் குறிப்பிடுக.
20. சாதல் எப்போது இனிதாகிறது?

## பகுதி - இ

## ❖ விரிவாக விடையளி

21. மழையின் சிறப்புகளை எடுத்துரைக்க.
22. வாழ்க்கைத்துணை எவ்வாறு அமைய வேண்டும் என்பதைத் திருக்குறள் வழி விளக்குக.
23. விருந்தோம்பலின் பயன்களைக் குறிப்பிடுக.
24. பிறனில் விழையாமையைத் திருவள்ளுவர் எங்ஙனம் வலியுறுத்துகின்றார்?
25. பயனில சொல்வதால் விளையும் தீமைகள் யாவை?
26. வெஃகாமையின் சிறப்புகளைக் குறிப்பிடுக.
27. ஒப்புரவாளனின் செல்வம் எவ்வாறு பயன்படும்?

28. தீவினைக்கு எவ்வாறு அஞ்சியொழுக வேண்டுமென்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்?

29. புறங்கூறுபவர்களைத் திருவள்ளுவர் எவ்வாறு இடித்துரைக்கிறார்?

30. அருளுடைமையின் சிறப்புகளை விளக்குக.

## பகுதி - ஈ

## ❖ கட்டுரை வடிவில் விடையளி

31. பாயிரம் உணர்த்தும் செய்திகளைத் தொகுத்துக் கட்டுரை வரைக.

32. மனைமாட்சி, அதன் நன்கலமாக விளங்கும் மக்கட்பேறு ஆகியவை பற்றி விவரி.

33. நடுவுநிலைமை என்னும் அதிகாரம் உணர்த்தும் கருத்துகளை விளக்குக.

34. 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.

35. பொறையுடைமையின் பெருமைகளைக் கட்டுரைக்க.

36. அழுக்காறாமை என்னும் தலைப்பில் அமைந்துள்ள கருத்துகளை ஆய்க.

37. திருவள்ளுவர் குறிப்பிடும் இல்லறநெறி பற்றி விவரிக்க.

38. விருந்தோம்பலுக்கும் இனியவை கூறலுக்குமான தொடர்பினை விவரி.

39. ஈகையும் அதனால் எய்தும் புகழும் பற்றித் திருக்குறள் எடுத்துரைக்கும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

40. இல்லறவியலில் இடம்பெற்றுள்ள கருத்துகளை அதிகார முறைப்படித் தொகுத்து விளக்குக.

# அலகு - 2

## பகுதி - அ

### ❖ சரியான விடையைத் தேர்ந்தெடு

1. பழமொழி நானூறின் ஆசிரியர்
   - அ) நல்லாதனார்
   - ஆ) கபிலர்
   - இ) முன்றுறையரையனார்
   - ஈ) விளம்பி நாகனார்
2. தறுகண் பொறிப்பட்டவாறல்லால் பூணாது என்றெண்ணி இருப்பவன்
   - அ) பேதை
   - ஆ) அறிஞன்
   - இ) சான்றோன்
   - ஈ) வறியவன்
3. அறிவினை ........... அடும்.
   - அ) கல்வி
   - ஆ) வினை
   - இ) வீரம்
   - ஈ) ஊழ்
4. கொண்டதே கொண்டு அதனை விடாது ஒழுகுபவன்
   - அ) பேதை
   - ஆ) மூர்க்கன்
   - இ) கொள்கையாளன்
   - ஈ) அறிஞன்
5. தன் சுற்றத்தாரின் பசியைக் களையாமல் புதியவருக்கு உதவுபவர் எதனைப் போன்றவர்
   - அ) கரும்பனை
   - ஆ) தென்னை
   - இ) கமுகு
   - ஈ) வேம்பு

6. அவையவர்க்குக் கூற்றமாய் விளங்குவது

அ) கடுஞ்சொல்

ஆ) வாள்

இ) கல்வி

ஈ) கண்ணீர்

7. கற்றவர்களுக்கு ............. வேண்டுவதில்லை.

அ) செல்வம்

ஆ) பகை

இ) ஆற்றுணா

ஈ) தோற்றப்பொலிவு

8. இரந்துண்பவர்கள் எவ்வாறு செல்லுதல் கூடாது

அ) தனியாக

ஆ) பலராக

இ) தொடர்ந்து

ஈ) நாள்தோறும்

9. 'இருளில் இருந்தும் வெளி' என்பது யாருக்குச் சொல்லப்பட்டுள்ளது.

அ) பகைக்கு அஞ்சுபவர்

ஆ) வீரர்

இ) கல்லாதார்

ஈ) பேதையார்

10. சுடப்பட்டு உயிருய்ந்த சோழன் மகன்

அ) கிள்ளிவளவன்

ஆ) கோப்பெருஞ்சோழன்

இ) நெடுங்கிள்ளி

ஈ) கரிகாலன்

விடைகள் 1.இ 2.அ 3.ஈ 4.ஆ 5.அ 6.ஈ 7.இ 8.ஆ 9.அ 10.ஈ

## பகுதி - ஆ

### ❖ ஓரிரு சொற்களில் விடையளி

11. பேரறிவு உடையாரிடத்தும் குற்றம் எதனால் ஏற்படுகிறது?

12. வல்லவன் செல்வத்தை எவ்வாறு வழங்குவான்?

13. ஆகூழ், போகூழால் விளைவன யாவை?

14. மூர்க்கரின் தன்மை யாது?

15. எத்தகைய மன்னரைப் பகைவரால் அழிக்க இயலாது?

16. ' ஆராயானாகித் தெளிந்தான் விளிந்துவிடும்' - பொருள் தருக.

17. அரசன் தன் சுற்றத்தினரை ஏவலாளராக நியமித்தால் அவர்கள் எவ்வாறு ஒழுகுதல் வேண்டும்?

18. வலியாரால் துன்புறுத்தப்படுவோரைக் குறிப்பிடுக.

19. நல்லறத்தை எவ்வாறு இயற்ற வேண்டுமென்று பழமொழி நானூறு குறிப்பிடுகின்றது?

20. வறியோர்க்கு வழங்குபவன் எப்போது உள்ளதையும் மறைப்பான்?

## பகுதி - இ

### ❖ விரிவாக விடையளி

21. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் பழமொழிநானூறு பெறும் இடம் பற்றிக் குறிப்பிடுக.

22. பழமொழி நானூறு பற்றிக் குறிப்பு வரைக.

23. ‘அறியும், பெரிதாள் பவனே பெரிது' என்னும் பழமொழி உணர்த்தும் கருத்தினைப் புலப்படுத்துக.

24. 'அறுமோ, நரிநக்கிற்றென்று கடல்' என்னும் பழமொழி வாயிலாகப் பெறப்படும் கருத்தினை விளக்குக.

25. ஊழ்வினையின் வலிமையைப் பழமொழிநானூறு எங்ஙனம் விளக்குகிறது?

26. 'ஆயிரம் காக்கைக்கோர் கல்' - விவரிக்க.

27. ஆற்றவும் கற்ற அறிவுடையார்களின் சிறப்புகளை எடுத்துரைக்க.

28. இருதலைக் கொள்ளி என்று பழமொழி நானூறு யாரைக் குறிப்பிடுகிறது?

29. பகைவரின் துணைவரை நட்பாக்கிக் கொள்வது பற்றிக் குறிப்பிடுக.

30. கரிகாற்சோழன் பற்றிய செய்தியை விவரிக்க.

## பகுதி - ஈ

## ❖ கட்டுரை வடிவில் விடையளி

31. பழமொழி நானூறின் அமைப்பும் சிறப்பும் பற்றிக் கட்டுரைக்க.

32. ' பெரிதாள் பவனே பெரிது' , ' அறிவச்சம் ஆற்றப் பெரிது' ஆகிய பழமொழிகளை விளக்கி வரைக.

33. வல்லவனால் வழங்கப்படும் செல்வம், வளம்மிக்கார் செல்வம் பற்றிப் பழமொழி நானூறு கூறுவனவற்றை விவரிக்க.

34. மூர்க்கர், வெந்தொழிலர் செயல்கள் பற்றி விளக்கி வரைக.

35. மன்னர்கள் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளைப் பழமொழியின் வாயிலாகப் புலப்படுத்துக.

36. 'ஆடுபணைப் பொய்க்காலே போன்று' , 'ஆல் என்னிற் பூல் என்னுமாறு' ஆகிய பழமொழிகள் உணர்த்தும் கருத்துகளை விவரி.

37. பகைவரைக் கையாளும் முறை பற்றிய செய்திகளைத் தொகுத்துரைக்க.

38. 'இடைநாயிற் கென்பிடுமாறு', 'இடையன் எறிந்த மரம்' ஆகியவற்றை விரித்துரைக்க.

39. பகைவரைக் கண்டு அஞ்சுவோரின் செயல்களைப் பழமொழி நயமாக உணர்த்தும் பாங்கினை எடுத்துரைக்க.

40. பழமொழிப் பாடல்கள் உணர்த்தும் செய்திகளைச் சுருக்கிக் கட்டுரை வரைக.

## அலகு - 3

## பகுதி - அ

- **சரியான விடையைத் தேர்ந்தெடு**

1. பழுமரம் போல வாழ்பவர்
   அ) நண்பர்
   ஆ) சுற்றத்தார்
   இ) நல்லாண்மகன்
   ஈ) தந்தை
2. நாலடியாரின் வேறு பெயர்
   அ) முப்பால்
   ஆ) வேளாண் வேதம்
   இ) பொதுமறை
   ஈ) குறள்நெறி
3. ................. அனையார் கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும்.
   அ) நாய்
   ஆ) யானை
   இ) பூனை
   ஈ) பசு
4. மலர்ந்து பின் கூம்பாதிருப்பது
   அ) கயப்பூ
   ஆ) தோட்டப்பூ
   இ) அரும்பு
   ஈ) கோட்டுப்பூ
5. இடை நட்பிற்கு உதாரணம்
   அ) கமுகு
   ஆ) தேக்கு
   இ) தெங்கு
   ஈ) பனை
6. நீர்க்கு ........... உண்டு.
   அ) தட்டம்

ஆ) நுரை

இ) ஆழம்

ஈ) வேகம்

7. நட்பு கொண்ட பின் ஆராயக்கூடாதது

அ) குற்றம்

ஆ) குணம்

இ) குற்றமும் குணமும்

ஈ) குடிச்சிறப்பு

8. ஒருவர் .............. இருவர் நட்பு.

அ) பொறை

ஆ) கல்வி

இ) அன்பு

ஈ) கொடை

9. மாரி போலப் பயன் தருவது

அ) செல்வம்

ஆ) கல்வி

இ) சான்றோர் தொடர்பு

ஈ) சீரியார் கேண்மை

10. விரிநீர்க் குவளையை ............ ஒவ்வாது.

அ) தாமரை

ஆ) ஆம்பல்

இ) அனிச்சம்

ஈ) காந்தள்

விடைகள் 1.இ 2.ஆ 3.அ 4.ஈ 5.இ 6.ஆ 7.இ 8.அ 9.ஈ 10.ஆ

## பகுதி - ஆ

### ❖ ஓரிரு சொற்களில் விடையளி

11. யாரைப் பொன்னாகப் போற்றிக் கொளல் வேண்டும்?

12. தாய் எப்போது தன் வயாவும் வருத்தமும் மறப்பாள்?

13. 'இல்லையே தன்காய் பொறுக்கலாக் கொம்பு' - இவ்வுவமை யாருக்குச் சொல்லப்பட்டுள்ளது?

14. மதுரம் இலாளர் தொடர்பு எத்தகையது?

15. தெளிவில்லார் நட்பினும் நன்மை வாய்ந்தது எது?

16. தமரென்று கொள்ளப்பட்டவர் தமரல்லர் என்று அறிந்தால் செய்ய வேண்டுவது யாது?

17. சீரிலார் நட்பிற்கு உவமையாக நாலடியார் குறிப்பிடுவதைச் சுட்டுக.

18. யாருடைய 'கருமங்கள் வேறுபடும்' என்று நாலடியார் குறிப்பிடுகிறது?

19. விண்ணுலகை ஒத்த விழைவைத் தருவது எது?

20. கழுநீருள் காரடகும் எப்போது அமிழ்தமாகும்?

## பகுதி - இ

### ❖ விரிவாக விடையளி

21. நாலடியாரின் அமைப்பும் சிறப்பும் பற்றி எடுத்துரைக்க.

22. 'தலைமக்கள் ஆகற்பாலார்' பற்றி விளக்குக.

23. 'தமராயார் மாட்டே இனிது' என்று நாலடியார் கூறுவதனை விளக்குக.

24. நட்பாராய்தலில் யானையும் நாயும் எங்ஙனம் உவமைகளாகக் கையாளப்படுகின்றன?

25. 'மேவாதார் கைத்துண்டல் காஞ்சிரங்காய்' - விளக்கம் தருக.

26. எவற்றினும் எவை நன்று என்று நாலடியார் பட்டியலிடுகின்றது?

27. நட்பில் பிழையைப் பொறுத்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை நாலடியார் எவ்வாறு வலியுறுத்துகிறது?

28. 'களைபவோ கண் குத்திற்று என்றுதம் கை' - உவமை இடம்பெறும் சூழலை விளக்குக.

29. நுண்ணுணர்வினார் நட்பு, புல்லறிவினார் நட்பு ஆகியவற்றைப் புலப்படுத்துக.

30. கூடா நட்பினால் விளையும் தீமைகளைத் தொகுத்துரைக்க.

## பகுதி - ஈ

## ❖ கட்டுரை வடிவில் விடையளி

31. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் நாலடியார் பெறும் இடம் பற்றிக் கட்டுரை வரைக.

32. சுற்றத்தார், விரும்பி வழங்கும் உணவே சிறந்தது என்று சுற்றந்தழால் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள செய்திகளைத் தொகுத்துரைக்க.

33. சுற்றந்தழால் என்னும் தலைப்பில் அமைந்துள்ள செய்திகளைக் கட்டுரைக்க.

34. நட்பு கொள்வதற்கு முன் எவ்வாறெல்லாம் ஆராய்தல் வேண்டும் என்பதை விவரிக்க.

35. நட்பாராய்தலில் கையாளப்பட்டுள்ள உவமைகளின் சிறப்புகளை எடுத்துரைக்க.

36. நட்பாராய்தல் என்னும் அதிகாரம் உணர்த்தும் கருத்துகளைத் தொகுக்க.

37. நட்பில் எவ்வாறெல்லாம் பிழை பொறுத்தல் வேண்டும் என்பதனை ஆய்க.

38. 'நட்பில் பிழை பொறுத்தல்' என்னும் அதிகாரம் உணர்த்தும் செய்திகளை மதிப்பிடுக.

39. கூடாநட்பு எத்தகையது என்பதனை நாலடியார் வழி விளக்கி வரைக.

40. 'நட்பியல்' என்னும் தலைப்பில் நாலடியாரில் இடம்பெறும் அதிகாரக் கருத்துகளைத் தொகுத்துக் கட்டுரை வரைக.

# அலகு - 4

## பகுதி - அ

### ❖ சரியான விடையைத் தேர்ந்தெடு

1. திரிகடுகத்தின் ஆசிரியர்
   - அ) கூடலூர் கிழார்
   - ஆ) விளம்பி நாகனார்
   - இ) நல்லாதனார்
   - ஈ) பூதஞ்சேந்தனார்
2. திரிகடுகப் பாடல்களில் இடம்பெறும் கருத்துகளின் எண்ணிக்கை
   - அ) இரண்டு
   - ஆ) மூன்று
   - இ) நான்கு
   - ஈ) ஐந்து
3. ……….. இனனாய் ஒழுகல், அறியாமையால் வரும் கேடுகளுள் ஒன்று
   - அ) கல்லார்க்கு
   - ஆ) கள்ளர்க்கு
   - இ) பகைவர்க்கு
   - ஈ) மூர்க்கர்க்கு
4. பிறர் தன்னைப் பேணுங்கால் தான் அடைவது
   - அ) நிறைவு
   - ஆ) செல்வம்
   - இ) மகிழ்ச்சி
   - ஈ) நாணம்
5. …………… இல்லாத ஊர் நன்மை பயத்தல் இன்று.
   - அ) கணக்காயர்
   - ஆ) மூத்தோர்
   - இ) மருத்துவர்
   - ஈ) விருந்தினர்
6. நான்மணிக்கடிகையை இயற்றியவர்
   - அ) நல்லாதனார்

ஆ) விளம்பி நாகனார்

இ) பூதஞ்சேந்தனார்

ஈ) கபிலர்

7. நான்மணிக்கடிகையின் பாடல்களில் இடம்பெறும் கருத்துகளின் எண்ணிக்கை

அ) 5

ஆ) 7

இ) 4

ஈ) 6

8. உள்ளம் குறைபட வாழாதவர்

அ) உரவோர்

ஆ) உயர்ந்தோர்

இ) சான்றோர்

ஈ) நல்லோர்

9. அருளில் பிறப்பது

அ) அன்புநெறி

ஆ) தவநெறி

இ) அறிவுநெறி

ஈ) அறநெறி

10. பெண்மை நலத்திற்கு அணி

அ) நாணம்

ஆ) மடம்

இ) பேதைமை

ஈ) அச்சம்

விடைகள் 1.இ 2.ஆ 3.அ 4.ஈ 5.அ 6.ஆ 7.இ 8.அ 9.ஈ 10.அ

## பகுதி - ஆ

### ❖ ஓரிரு சொற்களில் விடையளி

11. திரிகடுகம் போலும் மருந்து என்று சொல்லப்படுபவை எவை?
12. அறியாமையால் வரும் கேடுகளுள் ஒன்றினைச் சுட்டுக.
13. யாருடைய அயலிருப்பினால் பயனில்லை?
14. வேளாளனின் தன்மை யாது?
15. கூவல் என்பதன் பொருள் தருக.
16. பொன்னின் நலத்தை எவ்வாறு காண்பர்?
17. கள்ளி வயிற்றில் பிறப்பது எது?
18. மாநாகத்தை எவ்வாறு பிணிப்பர்?
19. வெற்றியை விரும்பினால் எதனை விடல் வேண்டும்?
20. மனைக்குப் பாழ் என்று குறிப்பிடப்படுவது யாது?

## பகுதி - இ

### ❖ விரிவாக விடையளி

21. திரிகடுகம் பற்றிக் குறிப்பு வரைக.
22. துஞ்சூமன் கண்ட கனா என்று சொல்லப்படுவனவற்றை விளக்குக.
23. 'யாண்டும் பெறற்கரியார்' என்று போற்றப்படுவோரைக் குறிப்பிடுக.
24. கள்வரினும் அஞ்சப்படுபவை எவை? விவரி.
25. இறவாத உடம்பை எய்தியோர் பற்றி எடுத்துரைக்க.
26. நான்மணிக்கடிகை பற்றிக் குறிப்பு வரைக.
27. எவருக்கெல்லாம் துயிலில்லை என்று நான்மணிக்கடிகை சுட்டுகின்றது?
28. நோய் செய்வார் பற்றி விளக்குக.

29. எவை எவற்றில் பிறக்கும் என்பதை நான்மணிக்கடிகை வழி விளக்குக.

30. 'வேண்டும்' என்றும் 'வேண்டின்' என்றும் அமைந்துள்ள நான்மணிக்கடிகை பாடற் கருத்துகளை எடுத்துரைக்க.

## பகுதி - ஈ

### ❖ கட்டுரை வடிவில் விடையளி

31. திரிகடுகம் நூலின் அமைப்பும் சிறப்பும் பற்றிக் கட்டுரை வரைக.

32. அறியாமையால் வரும் கேடு, அருந்துயரம் காட்டும் நெறி, நன்மை பயவாதவை என்று திரிகடுகம் கூறுவனவற்றை ஆய்க.

33. 'ஊராண்மை என்னும் செருக்கு', 'ஊரெல்லாம் நோவதுடைத்து' என்று குறிப்பிடப்படுவனவற்றை விவரிக்க.

34. கேளாகக் கொள்ளத்தக்கோர், நட்கப்படாதவர் ஆகியோரைத் திரிகடுகம் வழி விளக்குக.

35. திரிகடுகத்தில் இடம்பெறும் வாழ்வியல் அறங்களைத் தொகுக்க.

36. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் நான்மணிக்கடிகை பெறும் இடம், அதன் அமைப்பு மற்றும் சிறப்புகளை விவரிக்க.

37. 'தான்செல் உலகத்தறம்' , தகுதி இறுவாய்த்து உயிர்' என்று முடியும் நான்மணிக்கடிகை பாடற் கருத்துகளை விளக்குக.

38. 'அறிப', 'தோன்றா', 'பிணிப்பர்' என்னும் சொற்கள் கொண்டு அமைக்கப்பட்டுள்ள நான்மணிக்கடிகை பாடல் கருத்துகளை விரித்துரைக்க.

39. 'கற்றான் கடந்துவிடும்', 'கற்றறிவு இல்லா உடம்பு' ஆகியவற்றைத் தெளிவுபடுத்துக.

40. நான்மணிக்கடிகை உணர்த்தும் அறங்களை வகைப்படுத்திக் கட்டுரை வரைக.

# அலகு - 5

## பகுதி - அ

❖ **சரியான விடையைத் தேர்ந்தெடு**

1. இனியவை நாற்பது நூலை இயற்றியவர்
   அ) கணிமேதாவியார்
   ஆ) பூதஞ்சேந்தனார்
   இ) கபிலர்
   ஈ) நக்கீரர்
2. ............... உடைய படைகாண்டல் மிக இனிது.
   அ) குதிரை
   ஆ) தேர்
   இ) யானை
   ஈ) காலாள்
3. குழவி எவ்வாறு வாழ்தல் இனிது
   அ) வளமாக
   ஆ) செல்வத்துடன்
   இ) உயர்வாக
   ஈ) பிணியின்றி
4. யாருடைய முன்னிலையில் கல்வி உரைத்தல் இனியது
   அ) கற்றார்
   ஆ) கல்லார்
   இ) வறியார்
   ஈ) கலைஞர்
5. எதனை அறிந்து வழங்கல் வேண்டும்.
   அ) வறுமை
   ஆ) பண்புடைமை
   இ) கைம்மாறு
   ஈ) வருவாய்
6. ........... கொண்டும் செய்வன செய்தல் வேண்டும்.
   அ) துன்பம்

ஆ) கடன்

இ) வறுமை

ஈ) இரத்தல்

7. சூதர் எதற்கு அஞ்சார்

ஆ) பகை

ஆ) பழி

இ) பாவம்

ஈ) கொலை

8. பால்படும் கற்றா உடையான் ........... இனிது.

அ) விருந்து

ஆ) செல்வம்

இ) நட்பு

ஈ) கேண்மை

9. ஆக்கம் அழியினும் கூறத்தகாதது

அ) பொய்

ஆ) கொடுஞ்சொல்

இ) வசைச்சொல்

ஈ) அல்லவை

10. சொல்லுங்கால் ............ இன்றிச் சொல்ல வேண்டும்.

அ) பிழையின்றி

ஆ) சோர்வின்றி

இ) செறிவாக

ஈ) திறம்பட

THIRUPPANANDAL
EDUCATION IS WEALTH

விடைகள் 1.ஆ 2.இ 3.ஈ 4.அ 5.ஈ 6.ஆ 7.இ 8.அ 9.ஈ 10.ஆ

## பகுதி - ஆ

### ❖ ஓரிரு சொற்களில் விடையளி

11. யாருடைய தாளைச் சேர்தல் இனிதாகும்?
12. கற்றலை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும்?
13. ஆற்றுந் துணையால் செய்ய வேண்டுவது யாது?
14. வாடும் பைங்கூழ்க்கு இனியதனைச் சுட்டுக.
15. எத்தகைய பதி இனியதாகும்?
16. அந்தணர்க்கு எவற்றை ஈதல் வேண்டும்?
17. எதனைச் சிந்தித்து வாழ்தல் இனிதென்று கூறப்படுகின்றது?
18. வெற்றிவேல் வேந்தர்க்கு இனியவைகளுள் ஒன்றினைச் சுட்டுக.
19. இளமையை எவ்வாறு உணர்தல் வேண்டும்?
20. எதனை எண்ணி ஊக்கம் பிறத்தல் இனியது?

## பகுதி - இ

### ❖ விரிவாக விடையளி

21. இனியவை நாற்பது பற்றிக் குறிப்பு வரைக.
22. 'தலையாகத் தான் இனிது நன்கு' என்று முடியும் இனியவை நாற்பது பாடற் கருத்தைப் புலப்படுத்துக.
23. 'தீர்வின்றேல் இனிது', 'மானிடவர்க்கெல்லாம் இனிது' ஆகியவற்றை விளக்குக.
24. குழவி பற்றி இனியவை நாற்பதில் இடம்பெற்றுள்ள செய்திகளைக் குறிப்பிடுக.
25. 'தகுதியால் வாழ்தல் இனிது' என்று முடியும் இனியவை நாற்பது பாடல் கருத்தை எடுத்துரைக்க.
26. 'திறன் தெரிந்து வாழ்தல் இனிது' என்று சொல்லப்படுபவைகளை விவரி.
27. பகைவரைப் பற்றி இனியவை நாற்பதில் இடம்பெற்றுள்ள கருத்துகளைத் தொகுத்துரைக்க.

28. 'எத்துணையும் ஆற்ற இனிது' எவை?

29. படைகள் பற்றிய செய்திகளை இனியவை நாற்பது எவ்வாறு எடுத்தியம்புகின்றது?

30. 'நன்றியின் நன்கு இனியது இல்' - விளக்கம் தருக.

## பகுதி - ஈ

### ❖ கட்டுரை வடிவில் விடையளி

31. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் இனியவை நாற்பது பெறுமிடம், அதன் அமைப்பு மற்றும் சிறப்புகளை விவரி.

32. கல்வி மற்றும் கற்றார் பற்றி இனியவை நாற்பது குறிப்பிடுவனவற்றைத் தொகுக்க.

33. அரசர்க்கு இனியவைகளாகச் சொல்லப்பட்டுள்ள கருத்துகளை ஆய்க.

34. ஈகை பற்றிய கருத்துகளைப் பூதஞ்சேந்தனார் எவ்வாறு விளக்கியுள்ளார்?

35. இனியவை நாற்பதில் இடம்பெற்றுள்ள தனிமனித அறங்களை ஆய்க.

36. நட்பு மற்றும் பகை பற்றிய செய்திகளை இனியவை நாற்பது நூலின் வழி விளக்குக.

37. பூதஞ்சேந்தனார் எடுத்துரைக்கும் அறங்களை விவரி.

38. இனியவை நாற்பது குறிப்பிடும் வாழ்வியல் நெறிகளைப் புலப்படுத்துக.

39. எவற்றை விலக்குதல் (விடுதல்) வேண்டுமென்று பூதஞ்சேந்தனார் குறிப்பிடுகின்றார்?

40. இனியவை நாற்பது விவரிக்கும் இனியவைகளைக் கட்டுரைக்க.